**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8ம் நாள் திங்கட்கிழமை

**IA.No.2/2025 in OS.No.203/2017**

**TNTM 03000521/2017**

ரமேஷ்குமார் ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிராக/

நீலகண்டன் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 20.08.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.S.தனஞ்செயன்,M.A.,L.L.B., திரு.N.ஜெகதீசன்,B.A.,B.L., ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.ராஜமூர்த்தி,B.A.,B.L., திருமதி.ஷோபனா,B.Sc.,L.L.B., அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணத்தை மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஏற்று குறியீடு செய்ய உத்தரவு பிறப்பிக்க கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 8 விதி 1A(3) ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் மேற்படி வழக்கில் பிரதிவாதி ஆவார். இம்மனுவில் மனுதாரர் ஆவார். மேற்படி வழக்கானது மனுதாரர்/பிரதிவாதி தரப்பு வாக்குமூலத்திற்காக வேண்டி வாய்தா போடப்பட்டுள்ளது. இத்துடன தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட ஆவணங்கள் மனுதாரர்/பிரதிவாதி தரப்பு ஆவணங்களாக மேற்படி வழக்கில் குறியீடு செய்ய வேண்டியுள்ளது. எனவே இம்மனு ஷெட்யூலில் கண்டுள்ள விவரப்படி மேற்படி வழக்கில் பிரதிவாதி தரப்பு கூடுதல் ஆவணங்களாக ஏற்று ரிசிவ் செய்து அனுமதித்து உத்திரவு பிறப்பிக்கவேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **எதிருரை சுருக்கம்:–**

மனுதாரரின் மனு மோசடியானது, கற்பனையானது, சட்டப்படி மற்றும் நியாயப்படி செல்லத்தக்கதல்ல. மனுதாரரின் மனுவில் கண்ட அனைத்து சங்கதிகளையும் இந்த எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார். இந்த எதிர்மனுதாரர் தானாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர, மற்ற சங்கதிகளை இந்த மனுதாரரே கண்டிப்பாக நிரூபிக்க வேண்டியது. மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு எவ்வித காரணமும் குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்புடையதல்ல. வழக்கை காலம் கடத்த வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 27.08.2017 தேதியிட்ட பிரதிவாதி, வாதி மீது கொடுத்த புகார் 15.09.2017 தேதியிட்ட

சி.எஸ்.ஆர்.எண்.437/2017 ஆகிய ஆவணங்கள் இவ்வழக்கிற்கு சம்மந்தம் இல்லாதவை. அந்த ஆவணங்களில் வாதி தரப்பினர் இல்லை. அந்த புகாரின் மீதான நடவடிக்கை குறித்து வாதிக்கு தெரியாது. வாதி மீது தவறான விவரங்களை குறிப்பிட்டு வாதிக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதியின் தகப்பனார் பச்சையப்பன் முதலியார் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த 16.11.2006 தேதியிட்ட செட்டில்மெண்ட ஆவணம் மற்றும் 10.01.2007 தேதியிட்ட கிரைய ஒப்பந்த ஆவணம் மற்றும் 18.02.2012, 12.08.2013 ஆகிய தேதியிட்ட அறிவிப்பு 19.08.2013 தேதியிட்ட பதில் அறிவிப்பு ஆகிய ஆவணங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் சமயத்தில் மனுதாரர் வசம் இருந்தது அவற்றை எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யாமல் இருந்ததற்கான காரணம் எதுவும் இம்மனுவில் குறிப்பிடவில்லை. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

3. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

4. மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை.

5. <u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை தனது தரப்பில் ஆவணங்களாக குறியீடு செய்ய ஏற்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது அடமான கடனை வசூல் செய்ய வாதி/எதிர்மனுதாரர் இந்த மனுதாரர்/பிரதிவாதி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு சாட்சியம் அளிக்க வாய்தா ஏற்பட்ட நிலையில், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுதாரர்/பிரதிவாதி தரப்பு ஆவணங்களை ஏற்க அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பில் வாதம் செய்யும்போது, வாதியை அலைகழிக்கவேண்டியும், வழக்கை காலம் கடத்தவேண்டியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் சமயத்தில் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணம், கிரைய ஒப்பந்தம், வாதி தரப்பில் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு, பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு ஆகியவை மனுதாரர் வசம் இருந்த நிலையில் அவற்றை எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்வதற்கு உரிய காரணம் எதுவும் குறிப்பிடவில்லை. மேலும் மனுதாரர்/எதிர்மனுதாருக்கு எதிராக காவல் நிலையத்தில் கொடுத்த புகார் பற்றியும் விசாரணை விவரங்களும் இந்த எதிர்மனுதாரருக்கு தெரியாது. எனவே உரிய காரணம் குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி

செய்யவேண்டும் என்று வாதம் செய்யப்பட்டது.

7. அசல் வழக்கானது அடமான கடன் வசூல் செய்ய வேண்டி வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து சம்மந்தமாக மனுதாரர் பெயருக்கு அவரது தகப்பனார் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம், வாதி பெயருக்கு இந்த பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்தம், வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு, பிரதிவாதி, வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு, பிரதிவாதி, வாதிக்கு எதிராக அளித்த புகார் ஆகியவற்றை ஆவணங்களாக ஏற்க அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கில் உள்ள தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை தீர்வு காண்பதற்கு உதவிகரமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவை அனுமதிப்பதினால், எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர்/பிரதிவாதிக்கு தனது தரப்பு எதிர்வழக்குரையை நிரூபணம் செய்ய ஒரு வாய்ப்பினை அளிப்பதற்கு நீதியின் பால் அமையும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும், மனுதாரர் தனது தரப்பு எதிர்வழக்குரையை தாக்கல் செய்யும்போது இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் மனுதாரர் வசம் இருந்துள்ள நிலையில், அதனை எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யாமல் காலம் கடந்த தாக்கல் செய்திருப்பதால் எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்/எதிர்மனுதாரருக்கு ரூ.1000/-த்தை வருகின்ற 15.09.2025 தேதிக்குள் செலுத்தவேண்டும். செலுத்த தவறினால் மனு தானாகவே தள்ளுபடி ஆகிவிடும். அழைக்க வாய்தா 16.09.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.09.08 18:31:56 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:-</u>** இல்லை

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.09.08 18:32:05 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.